## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 142 /2014**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 12**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோகுலகிருஷ்ணன், | தொழில் | : டைப்பிங் இன்ஸ்ட்டு |
| தந்தை பெயர் | : நடராஜன் | சமயம் | : |
| கிராமம் | : சிறுதலைப் பூண்டி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 48 |

தேதி 04.10.2023

**(1,2 எதிரிகள் ஆஜர் )**

சாட்சியையும் எதிரியும் DCB காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி. கீதா W.Gr.12015 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**முதல் விசாரணை**

**1.** நான் சிறுதலைப்பூண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஏழுமலை என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் எனக்கு யார் என்று தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் நீதிமன்றத்திற்கு வர சொன்னார்கள் வந்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. போலிசார் விசாரணையில் ஆஜர் எதிரிகள் இருவரும் அண்ணாமலை பல்கலைகழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு, பட்டம் வாங்கி தரும் ஏஜென்ட்டாக சம்பளத்திற்கு வேலை செய்ய என்னிடம் இருந்து ரூ.5000/- பெற்றதகாவும், பின்னர் வேலை வாங்கி தரவில்லை என்றும் போலிசார் விசாரரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:**

**4.** போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. ஆஜர்

எதிரிகளை  தெரியுமா என்றால் யார் என்று தெரியவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.